அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 24/2026

எனது இலக்கம் : PA/PSRD/02/19/1
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.09.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்
மாவட்டச் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் /

**அரச சேவையின் மனிதவள முகாமைத்துவ தகவல் முறைமை – GovHR பயனர் விவரத்-தொகுப்பிற்கான (User Profiles) தகவல்களை உள்ளடக்குதல்**

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் அரச சேவையின் ஆட்சேர்ப்பு, நிரந்தரமாக்கல், தரமுயர்வு, இடமாற்றம், ஓய்வூதியம் உள்ளிட்ட மனிதவள முகாமைத்துவச் செயன்முறைகளை நிகழ்நிலை முறைமையில் நிறைவேற்றுவதற்காக அரச சேவையின் மனிதவள முகாமைத்துவத் தகவல் முறைமை -GovHR அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

02. முதற்கட்டமாக, பின்வரும் நாடளாவிய சேவைகள் ஆறிற்கு) 06) மற்றும் இணைந்த சேவைகள் மூன்றிற்கு) 03) முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **நாடளாவிய சேவைகள்**
  - i. இலங்கை நிருவாக சேவை
  - ii. இலங்கை திட்டமிடல் சேவை
  - iii. இலங்கை கணக்காளர் சேவை
  - iv. இலங்கை பொறியியலாளர் சேவை
  - v. இலங்கை விஞ்ஞான சேவை
  - vi. இலங்கை கட்டிட நிர்மாண சேவை
- **இணைந்த சேவைகள்**
  - i. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை
  - ii. அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை
  - iii. இலங்கை அரசாங்க நூலகர் சேவை

03. தங்கள் அமைச்சு, மாகாண சபை, ஆணைக்குழு அலுவலகம், மாவட்ட செயலகம், திணைக்களங்கள் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்கு இத்தகவல் முறைமையினுள் பிரவேசிப்பதற்காக, அவ் உத்தியோகத்தர்களின் கையடக்க தொலைபேசிகளுக்கு பயனர் பெயர் (User Name), கடவுச்சொல் (Password) மற்றும் இணைப்பு (URL) https://govhr.gov.lk என்பன GovHR முறைமை மூலமாக குறுஞ்செய்தியாக (SMS) அனுப்பி வைக்கப்படும்.

04. அப் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி மேலே குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பின் ஊடாக GovHR முறைமையினுள் முதன்முறையாகப் பிரவேசித்த பின்னர் கடவுச்சொல்லை உடனடியாக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும் .அதன் பின்னர் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மூலம் தமது தகவல்களை உள்ளிட்டு தமது பயனர் விவரத்தொகுப்-பினை (User Profile) பூர்த்தி செய்தல் வேண்டும் பயனர் . விவரத்தொகுப்-பினை பூர்த்தி செய்வதற்குரிய வழிகாட்டல்களுக்கான பயனர் கையேடு (User Manual) மற்றும் காணொளி (Video) என்பவற்றை https://govhr.gov.lk எனும் இணைப்பின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

05. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளின் உத்தியோகத்தர்களின் சேவையில் உறுதிப்படுத்தல், இடமாற்றங்கள், தரமுயர்வுகள் போன்ற மனிதவள முகாமைத்துவச் செயன்முறைகள் எதிர்காலத்தில் இம்முறைமை மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்பதினால், அதற்கு முன்னர் பயனர் விவரத்தொகுப்-பினை சரியாகப் பூர்த்தி செய்வது அத்தியாவசியமாகும்.

06. எனவே, உரிய தகவல்களை உள்ளிடுவதற்காக மேற்படி 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

07. பயனர் பெயர் அல்லது கடவுச்சொல் கிடைக்கப்பெறாவிடின் அல்லது GovHR முறைமையினுள் பிரவேசிப்பதில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின், பின்வரும் தொலைபேசி எண்களைத் தொடர்புகொள்வதன் மூலம் அல்லது மின்னஞ்சலொன்றை அனுப்புவதன் மூலம் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள முடியும்.

0112696211/13 } நீட்சி 812 - தகவல் தொழில்நுட்பப் பிரிவு - itdinfo@pubad.gov.lk
0112166000 } நீட்சி 138 - பொது சேவைகள் மறுசீரமைப்பு பிரிவு- reformsdiv@pubad.gov.lk
0112196604 - பொது சேவைகள் மறுசீரமைப்பு பிரிவு

08. மேலும், GovHR முறைமையின் மூலம் மனிதவளச் செயன்முறைகளை நிகழ்நிலை முறைமையில் நிறைவேற்றுவது தொடர்பான அறிவுறுத்தல்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும்.

09. அரச சேவையை டிஜிட்டல்மயமாக்குவதன் மூலம் மிகவும் வினைத்திறனுள்ள, நுண்திறன் அரச சேவையொன்றை வழங்குவதற்கான மிக முக்கியமான கட்டமாக இம்மனிதவள முகாமைத்துவ முறைமை நிறுவப்பட்டுள்ளமையினால், இப்பணியை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு தங்களின் மூலம் வழங்கும் ஒத்துழைப்பினை மிகவும் உயர்வாகக் கருதுகிறேன்.

ஒப்பம்./ எஸ.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 0112662340
தொலைநகல் : 0112695279
மின்னஞ்சல் முகவரி : info@pubad.gov.lk